செ.வெ.எண்: 04 நாள் : 07.04.2021

# அரியலூர் மாவட்டம்
# சட்டமன்ற தேர்தலில் பதிவான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை பாதுகாப்பு அறையில் வைத்து சீல் வைக்கப்பட்டது.

அரியலூர் மாவட்டம், கீழப்பழூர் அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் 149.அரியலூர் மற்றும் 150.ஜெயங்கொண்டம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் பதிவான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தலைமையில் பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டது.

மேலும், பாதுகாப்பு அறை தேர்தல் பொது பார்வையாளர்கள் **திரு.பரத் யாதவ், இஆப.,** அவர்கள் (149.அரியலூர் சட்டமன்ற தொகுதி), **திருமதி.சி.சத்யபாமா, இஆப.,** அவர்கள் (150.ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதி) மற்றும் வேட்பாளர்களின் முகவர்கள் முன்னிலையில் இன்று (07.04.2021) பூட்டி சீல் வைக்கப்பட்டது.

இந்திய தேர்தல் ஆணையத்தால் சட்டமன்ற பொதுத்தேர்தல் தேதி வெளியிடப்பட்டு, 06.04.2021 அன்று தேர்தல் சுமூகமான முறையில் நடைபெற்று முடிந்தது. 149.அரியலூர் சட்டமன்ற தொகுதியில் 376 வாக்குச்சாவடி மையங்களில் 2,64,715 வாக்காளர்களில் 2,23,800 நபர்கள் வாக்களித்து, 84.54 சதவீதம் வாக்குப்பதிவானது. மேலும், 150.ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதியில் 377 வாக்குச்சாவடி மையங்களில் 2,66,268 வாக்காளர்களில் 2,14,016 நபர்கள் வாக்களித்து, 80.38 சதவீதம் வாக்குப்பதிவானது.

அரியலூர் மாவட்டத்தில் நடைபெற்ற சட்டமன்ற பொதுத்தேர்தலில் 82.45 சதவீதம் வாக்குப்பதிவானது. வாக்குப்பதிவான வாக்குப்பதிவு இயந்திரங்களை வாக்கு எண்ணும் மையத்தில் பாதுகாப்பு அறையில் வைத்து சீல் வைக்கப்பட்டது.

வாக்கு எண்ணும் மையம் மற்றும் பாதுகாப்பு அறை முழுவதும் 170 CCTV கேமராக்கள் அமைக்கப்பட்டு, நிகழ்வுகள் முழுவதும் பதிவு செய்யப்பட்டு வருகிறது. இந்நிகழ்வினை கண்காணிக்க நாள் ஒன்றுக்கு 3 குழுக்கள் சுழற்சி முறையில் வட்டாட்சியர் நிலையில் அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும். மேலும், இந்த நடவடிக்கைகளை வேட்பாளர்களின் முகவர்கள் வாக்கு எண்ணும் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தொலைக்காட்சி வாயிலாக பார்வையிடலாம். வாக்கு எண்ணும் மையத்தினை சுற்றி நான்கு கண்காணிப்பு கோபுரம் அமைக்கப்பட்டு மத்திய காவல் படையினர் மற்றும் தமிழ்நாடு சிறப்பு காவல் படை, ஆயுதப்படை மற்றும் சட்டம் ஒழுங்கு காவல்துறையினர் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். மூன்றடுக்கு பாதுகாப்புகள் அமைக்கப்பட்டு, 24 மணிநேரமும் கண்காணிக்கப்பு பணி நடைபெறும். மேலும், 02.05.2021 அன்று வாக்கு எண்ணிக்கை நடைபெறும்.

இந்நிகழ்வில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வீ.பாஸ்கரன், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ஜெய்னுலாப்தீன், கோட்டாட்சியர்கள் ஏழுமலை (அரியலூர்), அமர்நாத் (உடையார்பாளையம்), தேர்தல் வட்டாட்சியர் அமுதா மற்றும் வேட்பாளர்களின் முகவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**